செ.வெ.எண்.16 நாள்: 06.03.2021

**தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் நிறுவனங்கள், அரசு துறை நிறுவனங்களும் 100 சதவீதம் மனசாட்சியின்படி வாக்களிக்க வேண்டும் என்பதை பொதுமக்களுக்கு வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் - தூத்துக்குடி வேலவன் ஹைப்பர் மார்கெட்டில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

தூத்துக்குடி வேலவன் ஹைப்பர் மார்கெட்டில் சட்டமன்ற தேர்தல் வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று (06.03.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் போடப்பட்ட ரங்கோலி கோலத்தினை பார்வையிட்டார். மேலும் அங்கு பொதுமக்களுக்கு வாக்குபதிவு தொடர்பான சந்தேகங்களை விளக்கும் வகையில் அமைக்கப்பட்ட மாதிரி வாக்குபதிவினை பார்வையிட்டார். தொடர்ந்து வேலவன் ஹைப்பர் மார்கெட் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துகொண்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்காளர் அனைவரும் சட்டமன்ற தேர்தலின்போது மனசாட்சியின்படி ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டும். அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அனைவரும் சட்டமன்ற தேர்தலில் பங்கேற்று அவசியம் வாக்களிக்க வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தும் வகையில் இன்று கூட்டுறவு துறையின் மூலம் காய்கறி மார்கெட், மெடிக்கல் ஷாப்பில் பல்வேறு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மேலும் நியாய விலை கடையில் வழங்கப்படும் பொருட்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டி வழங்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி வேலவன் ஹைப்பர் மார்கெட்டில் வரும் வாக்காளர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரங்கோலி கோலம் போடப்பட்டுள்ளது. மேலும் இங்கு இவிஎம், விவிபேட் தொடர்பாக வாக்காளர்களுக்கு உள்ள சந்தேகங்களை தீர்க்கும் வகையில் மாதிரி வாக்குபதிவு நடத்தப்பட்டு வருகிறது.

இங்கு மட்டுமின்றி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் 20 மின்னணு வாக்குபதிவு இயந்திரங்களை கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. ஹைப்பர் மார்கெட் கடைகளில் வழங்கும் பில்களிலும் வாக்குபதிவின் அவசியம், வாக்குபதிவு நாள் குறித்து சீல் வைத்து கொடுக்கும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் ரசீதுகளிலும் விழிப்புணர்வு சீல் வைத்து வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுபோல மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்களும், அரசுத்துறை நிறுவனங்களும் வாக்களர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் திரு.சிம்ரன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) திரு.சதீஸ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.சீனிவாசன், கூட்டுறவு காய்கறி விற்பனை அங்காடி நிர்வாக இயக்குநர் திரு.அந்தோணிபட்டுராஜ்,வட்டாட்சியர் திரு.ஜஸ்டின், வேலவன் ஹைப்பர் மார்கெட் அதிபர் திரு.ஏ.தனபால், இயக்குநர்கள் திரு.மகாராஜன், திரு.ஆனந்த், மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.